நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் கூத்தன்குழி மீனவ கிராமத்தைச் சேர்ந்த சிலுவை தஸ்நெவிஸ் என்பவர் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது தவறி கடலில் விழுந்து உயிரிழந்ததை தொடர்ந்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் மூலம் ரூபாய் 2 லட்சத்திற்கான காசோலையினை அன்னாரது மனைவியிடம் நேரில் சென்று வழங்கி ஆறுதல் கூறினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் ஜெகதீஸ்,ஜோசப்பெல்சி உள்ளனர்.

சென்னையில் நேற்று (09.12.2023) மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு பகுதி பொதுமக்களுக்கு தோட்டக்கலை துறையின் சார்பில். நடமாடும் வாகனங்கள் மூலம் மலிவு விலையில் காய்கறிகள் விற்பனையை வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வின்போது வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் முனைவர் ச. நடராசன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தாதேவி மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

விமானக் கட்டண விலையேற்றத்தைத் தடுக்க

ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் ஏதேனும் பலனைத் தருமா?

மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 10-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 07 டிசம்பர் 2023 அன்று மக்களவையில்,விமானக் கட்டண விலையேற்றத்தை தடுக்க, ஒன்றிய அரசு, ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? என்றும், குறிப்பாக கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகளின் போது அகமதாபாத் நகரத்திற்கான விமானக் கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டது, அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் ஜெனரல் வி.கே.சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

விமான விதிகள் 1933ன் படி, விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம், விமான கட்டணங்களை முறைபடுத்தி வருவதாகவும், இதற்காகவே கட்டண கண்காணிப்பு மையம், தலைமை இயக்குநரகத்தில் செயல்பட்டு வருவதாகவும், விமான விதிகளின் படி, ஒவ்வொரு மாதமும் விமான கட்டண விகிதங்கள் இயக்குநரகத்தில் பதிவேற்றம் செய்யபட்டுவருவதாகவும், முன்னதாகவே, விமானப் போக்குவரத்திற்கான கட்டணச் சீட்டு பெறப்படும்போது குறைவான விலையில் கிடைக்கிறது என்றும், பயணத்தேதி அருகில் உள்ள நிலையில் விமானக் கட்டணம் உயர்வாகவே உள்ளது என்றும் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

விமானக் கட்டணத்தை ஒன்றிய அரசு கட்டுபடுத்த இயலாது என்றும், இயக்குதலுக்கான செலவு, சேவையின் தரம், இலாபம் ஆகிய காரணிகளின் அடிப்படையில் விமானக் கட்டணம் அமைகிறது என்றும் கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகளின் போது அகமதாபாத் நகரத்திற்கான விமானக் கட்டணம் மூன்று மடங்கு வரை உயர்ந்தது உண்மைதான் என்றும், முன்னதாகவே பயணச் சீட்டு பெறுபவர்களுக்கு விமானக் கட்டணம் குறைவாகவும் பயணத் தேதிக்கு மிக அருகில் பயணச்சீட்டு பெறப்பட்டால், விமானக் கட்டணம் அதிகமாகவே உள்ளது என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் ஜெனரல் வி. கே.சிங், மக்களவையில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

ஒன்றிய அரசின் "போஷன் " திட்டத்தைக் கண்காணிக்க பயன்படுத்தப்படும்

செயலியில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய எடுத்த நடவடிக்கை என்ன?

மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச.10-

ஒன்றிய அரசின் கீழ் செயல்பட்டு வரும் ஒன்றியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் "போஷன்" திட்டத்தை கண்காணிக்க பயன்படுத்தப்படும் செயலியின் குறைபாடுகள் மற்றும் அதற்காக வழங்கப்பட்ட அரசு கைபேசிகளின் பிரச்சினைகள் போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சகத்திடம் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் நாடாளுமன்றத்தில் எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு:-

குழந்தை நலன் பராமரிப்பு பணியாளர்கள் "Poshan Tracker" செயலியை பயன்படுத்துவதில் உள்ள சவால்கள், ஒன்றிய அரசாங்கத்தால் வழங்கப்படும் ஸ்மார்ட் போன்கள் கிடைக்காமை, தரமற்ற சாதனங்கள் மற்றும் நம்பகத்தன்மையற்ற இணைய இணைப்பு தொடர்பான சிக்கல்கள் குறித்து அரசாங்கம் அறிந்திருக்கிறதா என கேள்வி எழுப்பினார்.

குழந்தை நலன் பராமரிப்புப் பணியாளர்களுக்கு தேவையான தொழில்நுட்பம் மற்றும் "Poshan Tracker" செயலியை திறம்பட கையாள வழிமுறைகளை உறுதி செய்வதற்காக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார். குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்து தேவைகளை நிவர்த்தி செய்ய சேகரிக்கப்பட்ட தரவு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என கேள்வி எழுப்பினார்.

ஊட்டச்சத்து குறைபாட்டைக் குறைப்பதில் குழந்தை நலன் பராமரிப்புத் திட்டங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு கணக்கியல் தரவுகளிலிருந்து விளைவு அடிப்படையிலான அளவீடுகளுக்கு மாற்ற அமைச்சகத்தின் திட்டங்கள் என்ன என கேள்வி எழுப்பினார். மொழித் தடைகளைத் தீர்ப்பதற்கும், கிராமப்புறப் பணியாளர்கள் அணுகக்கூடிய வகையில் மாநில மொழியில் செயலியை வழங்குவதற்கு அமைச்சகம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று விரிவான கேள்வி எழுப்பினார்.

இந்திய விவசாயிகளை இஸ்ரேலுக்கு அனுப்பி

வேளாண் தொழில்நுட்ப பயிற்சி அளிக்க திட்டம் உள்ளதா?

மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 10-

விவசாய உற்பத்தியைப் பெருக்க வேளாண் தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மையை மேம்படுத்த இந்தியா இஸ்ரேல் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது? இந்திய விவசாயிகளை இஸ்ரேலுக்கு அனுப்பி வேளாண் தொழில் நுட்ப பயிற்சி அளிக்க திட்டம் உள்ளதா? என நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நீர் மற்றும் இரசாயன உரங்களின் குறைந்த பயன்பாட்டினால் உற்பத்தியை அதிகரிக்க விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு U212 கூட்டமைப்பை உருவாக்க அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்களுடன் ஒன்றிய அரசு ஏதேனும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள் யாவை?

நாட்டில் மேம்பட்ட விவசாய உத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் ஒன்றிய அரசு ஏதேனும் ஒப்பந்தங்களை செய்துள்ளதா?

விவசாயத் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சிக்காக இந்திய விவசாயிகள் அடங்கிய குழுவை இஸ்ரேலுக்கு அனுப்புகிறதா? அதன் விவரம்? என்ன? என மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் :-

வெளியுறவு அமைச்சகத்தின் கூற்றுப்படி விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பத்தை மேம்படுத்த 12U2கூட்டமைப்பை உருவாக்க அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவற்றுடன் இந்திய அரசு எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை. பிப்ரவரி 2023 இல் காலநிலைக்கான வேளாண்மை கண்டுபிடிப்பு இயக்கத்தில் (AIM4C)இணைவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது. காலநிலைக்கான வேளாண்மை கண்டுபிடிப்பு பணி (AIM for Climate / AIM4C)என்பது அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் கூட்டு முயற்சியாகும். காலநிலை புத்திசாலித்தனமான விவசாயம் மற்றும் உணவு அமைப்புகள் கண்டுபிடிப்புகளுக்கான முதலீட்டை கணிசமாக அதிகரிக்க பங்கேற்பாளர்களை ஒன்றிணைப்பதன் மூலம் காலநிலை மாற்றம் மற்றும் உலகளாவிய பசியை நிவர்த்தி செய்ய AIM4Cமுயல்கிறது. மற்ற நாடுகளுடன் இஸ்ரேலும் AIM4Cஇல் உறுப்பினராக உள்ளது.

இந்தியாவும் இஸ்ரேலும் 1993 இல் விவசாய ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் கீழ் இருதரப்பு மூன்று ஆண்டு செயல் திட்டங்களின் மூலம் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. இது வரை இந்தியா மற்றும் இஸ்ரேல் இடையே 5 மூன்று ஆண்டு செயல்திட்டங்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக இந்தியா முழுவதும் 13 மாநிலங்களில் செயல்பாட்டு மையங்கள் (CoES)நிறுவப்பட்டுள்ளன. இந்த CoEகள் தோட்டக்கலைத் துறையில் சமீபத்திய தொழில்நுட்பங்களுக்கான செயல்விளக்க மற்றும் பயிற்சி மையங்களாக செயல்படுகின்றன. உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப இஸ்ரேலிய விவசாயம் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்களை செயல்படுத்துதல் தனித்தனியாக அவ்வப்போது பல்வேறு மாநில அரசாங்கங்கள் கல்வி மற்றும் திறனை வளர்க்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இஸ்ரேலுக்கு விவசாயிகளின் பிரதிநிதிகளை வழிநடத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் பிஞ்சிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ஈஸ்வரமூர்த்தி மகன் டில்லிபாபு என்கிற இளைஞர் கிராமத்தின் அருகே உள்ள கூவம் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைப் பார்வையிட தடுப்பணை அருகே சென்றபோது கால் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார். செய்தி அறிந்த திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் நேரில் சென்று மறைந்த இளைஞரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். இந்நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் கொண்டஞ்சேரி மோ. இரமேஷ் , ஒன்றிய நிர்வாகிகள் ரவி, ஊராட்சி மன்ற தலைவர் உமா மணிகண்டன், கிளை நிர்வாகிகள் ரவி, எட்டியப்பன், உமா முருகன், இளைஞரணி உதயம், மு.தயாளன், ஆர்.ராக்கி, ஆர்.இளையராஜா, மேகவண்ணன் இருதயராஜ் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தபால் அலுவலக மசோதா-துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கும்!

மாநிலங்களவையில் பி.வில்சன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச.10-

இந்திய தபால்கள் மூலம் அனுப்பப்படும் எந்தவித பொருளையும் தேசிய பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு என்கிற பெயரில் தன்னிச்சையாக இடைமறிக்க (திறந்து காணுதல்) அரசுக்கும் அதிகாரிகளுக்கும் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை புதிய தபால் அலுவலக மசோதா 2023 அனுமதி வழங்குகிறது. இது துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கும் என மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. பி.வில்சன் குறிப்பிட்டார்.

1898ஆம் ஆண்டின் இந்திய தபால் அலுவலகச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டு இந்திய தபால் அலுவலக மசோதா 2023 மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் தி.மு.க. சார்பில் பி.வில்சன் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

மத்திய அரசு தற்போது தாக்கல் செய்துள்ள வடிவத்தில் இந்த மசோதாவை நிறைவேற்றும் போது, இது நாட்டின் தபால் நிலையங்கள் மற்றும் அதன் சேவைகளை முடக்குவதற்கு வழிவகுக்கும். இதனால், தபால் சேவைகளில் தனியார் மயமாக்குதலையும் இந்த மசோதா மேலும் ஒரு படி ஊக்குவிக்கும்.

இந்திய தபால் துறைக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் உள்ள போட்டிகளை ஆய்வு செய்யாமல் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. உலகின் மிகப் பெரிய அஞ்சல் வலையமைப்பான இந்திய அஞ்சல் துறை அலுவலங்கள், நமது நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கி லும் உள்ளது.

நகர்ப்புற, கிராமப்புற இந்தியாவை இணைக்கும் இந்த தபால் அலுவலங்கள் 1.4 பில்லியன் இந்தியர்களின்அன்றாட வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதனுடைய உள்கட்டமைப்பு மேம்பாடுகள், அஞ்சல்கள் மற்றும் பார்சல்களை வரிசைப்படுத்துதல், எளிதான சேவைக்கு புதிய தொழில்நுட்பங்கள் போன்றவை வழங்கப்படாமல் அவசர நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய மசோதாவின் விதிகள் மூலம் ஏற்படும் தாக்கங்கள் அறியப்படவில்லை. இந்த மசோதாவின் 9-ஆவது பிரிவின் கீழ், நாட்டின் பாதுகாப்பு, நட்புறவு நாடுகள், பொது ஒழுங்கு, அவசரநிலை அல்லது பொதுப் பாதுகாப்பு போன்றவற்றின் அடிப்படையில் எந்தவொரு தபால்களையும், பார்சல்களையும் இடைமறிக்கவோ, திறக்கவோ அல்லது தடுத்து வைக்கவோ தபால் அதிகாரிக்கும் மத்திய அரசுக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. தேசிய பாதுகாப்பு என்கிற பெயரில் இடைமறிக்க, திறக்க அரசுக்கும், அதிகாரிக்கும் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குகிறது. இதில் அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறை அளவுகோல் எதுவும் இல்லை. இது அரசியலமைப்பில் வழங்கப்பட்ட சலுகைகளை மீறுவதாகும்.

இந்த தனியுரிமை நெறிமுறைகளை உச்சநீதிமன்றம் நிலைநிறுத்தியுள்ளது. இந்திய தபால் சேவைகளைப் பயன்படுத்தும் அனைத்து குடிமக்களின் தனியுரிமை கடுமையாக சமரசம் செய்யப்படுகிறது. இடைமறித்த லின்போது எடுக்கப்படும் உள்ளடக்கத்தின் ரகசியம் காக்கப்பட எந்த விதியும் மசோதாவில் இல்லை. ஒரு மகன் தன் தாய்க்கு எழுதுவான்; ஒரு கணவன் தன் மனைவிக்கு ; அண்ணன் தங்கைக்கு; வாடிக்கையாளர் தனது வழக்குரைஞருக்கு; ஒரு மாநிலத்தின் அமைச்சரவை தகவல் மற்ற துறைகளுக்கு அனுப்பப்பட்டது போன்ற தகவல்களை இடைமறிக்க முடியுமா? சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் தனியுரிமை இது பாதிக்காதா?

பொதுமக்கள் அனுப்பும் எந்தவிதப் பொருள்களுக்கும் பாதுகாப்பு உண்டு. தற்போது இந்த மசோதாவில் (பிரிவு 10) அஞ்சல் அலுவலகத்திற்கான அத்தகைய பொறுப்பிலிருந்தும் விலக்கு அளிக்கிறது. 'குறிப்பாக பொறுப்பு' என்ற சொற்றொடருக்கான விளக்கம் தெளிவற்றதாக உள்ளது.

இதனால், தபால் மூலம் அனுப்பப்படும் பொருள்களின் மதிப்பைக் கருத்தில் கொள்ளவில்லை. சேவையில் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால், அந்தக் கட்டணத்தை மட்டும் திரும்பப் பெறுவதற்கான உத்தரவாதம் உள்ளது. இது உண்மையில் துஷ்பிரயோகத்திற்கு வழி வகுக்கும். முந்தைய சட்டத்தில் சிறைத் தண்டனை, அபராதம் விதிக்கப்பட்டது. தற்போதைய புதிய மசோதா முந்தைய சட்டத்தின் விதிகளை நீர்த்துப் போகச் செய்கிறது என்றார் அவர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் அ.ம.மு.க., மாநில பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் சகாய டெல்வர், மாவட்டப் பொருளாளர் தேவராஜன், சி.பி.எம்.எல். மாவட்டச் செயலாளர் ராஜேஷ், தே.மு.தி.க. ஒன்றிய விவசாய அணி துணைச் செயலாளர் கிருஷ்ணன், பா.ஜ.க.வைச் சேர்ந்த சட்டக்கல்லூரி மாணவர் செல்வன். அஜின் உள்பட மாற்றுக்கட்சிகளைச் சார்ந்த 25க்கும் மேற்பட்டோர் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். தி.மு.க.வில் இணைந்தவர்களுக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட ஒன்றியச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.